DINAKARAN

15 APRIL 2021

PAGE 6

# புதுவை பல்கலை.யில் அம்பேத்கர் பிறந்த நாள்



▶ புதுவை பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு துணைவேந்தர் குர்மீத் சிங் மாலை அணிவித்து மரியாதை செய்தார்.

புதுச்சேரி, ஏப். 15: புதுவை பல்கலைக்கழகம், சிறப்பு இடஒதுக்கீடு பிரிவு சார்பில் டாக்டர் அம்பேத்கரின் 130வது பிறந்த நாள் விழா பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று கொண்டாடப்பட்டது. இடஒதுக்கீடு பிரிவு தொடர்பு அதிகாரி அருள் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக துணைவேந்தர் குர்மீத்சிங் கலந்து கொண்டு அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். தொடர்ந்து, பல்கலைக்கழக நுழைவு வாயிலில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அம்பேத்கரின் உருவப்படத்துக்கும் மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

விழாவில் எஸ்பி மாறன், உதவி பதிவாளர் (நிர்வாகம்) முரளிதாசன், செயற்பொறியாளர் சங்கரமூர்த்தி மற்றும் புல முதன்மையர்கள், துறை தலைவர்கள், பேராசிரியர்கள், ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாதோர் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

DINAMANI

15 APRIL 2021

PAGE 2

# புதுச்சேரி பல்கலை.யில் அம்பேத்கர் பிறந்த நாள் விழா

புதுச்சேரி, ஏப்.14: புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் அம்பேத்கரின் 130-ஆவது பிறந்த நாள் விழா புதன்கிழமை கொண்டாடப்பட்டது.

புதுச்சேரி பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றநிகழ்ச்சிக்கு,இட ஒதுக்கீடுபிரிவு தொடர்பு அதிகாரி அருள் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக துணைவேந்தர் குர் மீத்சிங் பங்கேற்று, பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள அம்பேத்கரின் சிலைக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து, பல்கலைக்கழக நுழைவு வாயிலில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அம்பேத்கரின் உருவப்படத்துக்கும் மலர் தூவி மரியாதை செலுத்தினார். இதில், காவல் துறைக் கண்காணிப்பாளர் மாறன், உதவிப் பதிவாளர் (நிர்வாகம்) முரளிதாசன், செயற்பொறியாளர் சங்கரமூர்த்தி, புலமுதன்மையர்கள், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

DINA THANTHI

15 APRIL 2021

PAGE 11

# புதுவை பல்கலைக்கழகத்தில் தடுப்பூசி முகாம்

புதுச்சேரி, ஏப்.15-

புதுவை பல்கலைக்கழகம், சுகாதார மற்றும் குடும்ப நல இயக்குனரகம் ஆகியவை இணைந்து 45 வயதுக்கு மேற்பட்ட ஆசிரிய, ஊழியர்கள் மற்றும் அறிஞர்களுக்காக கொரோனா இலவச தடுப்பூசி முகாமை பல்கலைக்கழக சுகாதார மைய வளாகத்தில் நடத்தின. இதற்கு பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் தலைமை தாங்கினார். பதிவாளர் சித்ரா முன்னிலை வகித்தார். இதில் ஆசிரியர்கள், ஊழியர்கள், கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொண்டனர்.

THE HINDU
15 APRIL 2021
PAGE 2

# L-G garlands Ambedkar's statue on his 130th birth anniversary

## Political parties organised separate functions on the occasion

SPECIAL CORRESPONDENT
PUDUCHERRY

Led by Lieutenant Governor Tamilisai Soundararajan, the Union Territory on Wednesday celebrated the 130th birth anniversary of Dr. B. R. Ambedkar.

Ms. Soundararajan garlanded the statue of Ambedkar in front of the Assembly. She waited for a few minutes near the venue as some Dalit outfits were garlanding the statue when she arrived on the Assembly premises.

Former Chief Minister V. Narayanasamy, Member of Parliament V. Vaithilingam and former Minister M. Kandasamy were among those who garlanded the statue.

Due to COVID-19 restrictions in place, the usual processions before garlanding the statue were avoided. Political parties also organised separate functions to commemorate the birth anniversary of Dr. Ambedkar.



**Rich tributes:** Lt. Governor Tamilisai Soundararajan garlanding the statue of Dr. B R Ambedkar on his birth anniversary on Wednesday. • T. SINGARAVELOU

The anniversary celebrations at Pondicherry University were hosted by the Special Reservation Cell of the University.

Gurmeet Singh, Vice-Chancellor of Pondicherry University, garlanded the statue of Dr. Ambedkar on the campus and paid floral tributes to the portrait inside the University building.

P.G. Arul, liaison officer, Special Reservation Cell, Superintendent of Police C. Maran, N. Giridharan, Assistant Registrar (Administration), Sankaramoorthy, Executive Engineer, Deans, professors, department heads, faculty and staff also paid floral tributes to the portrait of the architect of the Indian Constitution.